DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 497/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW1 (LW1)
Defence

Name : Mohan

Father Name /
Husband Name : Harikrishnan

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 24th day of July 2026.

எதிரிகளுக்கு மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

முதண்மை விசாரணை

நான் தற்போது கோட்டக்குப்பம் நெடுஞ்சாலை ரோந்துபிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.02.2025 அன்று நான் கோட்டக்குப்பம மதுவிலக்கு அமல்பிரிவு தலைமை காவலராக பணியிலிருந்தேன். அப்போது ஆய்வாளர் திருமதி.மீனா தலைமையில் அவருடன் நானும்

த.கா.செல்வம் ஆகியோருடன் 13.00 மணிக்கு கீழபுத்துப்பட்டு பேருந்து நிறுத்தம் அருகே வாகன சோதனை செய்துகொண்டிருந்தபோது டிஎன். 19 ஏடபிள்யூ 6752 என்ற ஹீரோ ஸ்பிளண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தை வழக்கின் எதிரி பூமிலிங்கம் ஓட்டிவந்தும் பின்னால் மற்றொரு எதிரி அருள்மொழி பின்னால் அமர்ந்து கொண்டு வந்தவர்களை நிறுத்தி சோதனை செய்தபோது அந்த வாகனத்தில் சந்தேகத்திற்கு இடமாக இருந்த பையை சோதனை செய்தபோது அதில் பாண்டிச்சேரி மதுபானங்கள் Mcdowells Gold Indian Brandy 750ml- 6Nos, Mansion House 1litre – 1No, பாட்டில்கள் இருந்தது. இதில் Mcdowells Gold Indian Brandy 750ml- 1 பாட்டில் மட்டும் திறந்து மூடிய நிலையில் இருந்தது. மேற்படி பாட்டில்கள் மற்றும் இருசக்கர வாகனம் ஆகியவைகளை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் மீனா 13.10 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரில் என் கையொப்பம் முதலாவதாக உள்ளது. சாட்சி செல்வம் கையொப்பம் 2வதாக உள்ளது. **மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1** ஆகும். மேற்படி கைப்பற்றப்பட்ட இருச்க்கர வாகனத்தின் 4 புகைப்படங்கள் சிடியுடன் **அ.சா-பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கைப்பற்றப்பட்ட Mcdowells Gold Indian Brandy 750ml- 6Nos, Mansion House 1litre – 1No, பாட்டில்களின் புகைப்படம் **அசா.ஆ.2 ஆகும்.** பின்பு ஆய்வாளர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்குசொத்துக்களுடன் நிலையம ் வந்து நிலைய குற்ற எண்.21/2025 பிரிவுகள் 4(1)(C), 4(1)(A), 14(A), 4(1)(h), 4(1)(a) TNP Amendment ACt எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றும் அதன் பதிவெண்ணையும் ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்த வாகனத்தை யார் சோதனை செய்தார்கள் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரி பாண்டிச்சேரி மதுபானங்களை வாகனத்தில் எந்த இடத்தில்வைத்து எடுத்துவந்தார் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி மேற்படி மதுபானங்களை பையில் எடுத்து வந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த பையை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ சாலை அதிக வாகனங்கள் செல்லும் சாலை என்றால் சரிதான். அந்த இடத்தில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக எனது ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

படிவம் 91ல் சாட்சிகளின் கையொப்பத்தில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எதிரி எந்த மதுபானங்களையும் எடுத்து வரவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக எனது ஆய்வாளர் தாக்கல் செய்த தவறான வழக்கிற்கு தற்போது தவறாக சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

N PREETHI
Digitally signed by N PREETHI
Date: 2026.07.24 13:05:45 +0530

நீதித்துறை நடுவர்,

வானூர்.